6. எவையேனும் ஒன்று குறித்து ஒரு பக்க அளவில் எழுதுக. (10)

(அ) வெறுங்கோயில்

(ஆ) தையல்காரரின் குண இயல்பு

(இ) எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு.

7. பின்வரும் பாடலில் அமைந்துள்ள சொல், பொருள், தொடை, சந்தம் முதலிய ஏற்புடை நயங்களை விளக்குக. (8)

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
    தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
    சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமையான புலமையெனில் வெளிநாட்டார்
    அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

8. இனிய தமிழில் மொழி பெயர்த்து எழுதுக. (7)

Swami Vivekananda came to South India. He went to Kanya Kumari. His friends said to him Swamije you must go to America now. There will be a meeting Chicago in America people call the meeting the Parliment of Religions. Write men from many places go to there. No, one goes from our country. You can speak at the meeting for India. You may speak about our religion. Swami Vivekananda said, "No I can't go, I don't have money; I don't know any one of there. How can I go there? His friends collected money for him. They said to him," You must go, we will help you America and all other countries will known about India and our religion.

---





# TAMIL

---

Time : Three hours Maximum : 100 marks

1. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ஐந்து வரிகளில் விடை தருக. (5 × 3 = 15)

(அ) தமிழ் மொழியின் பெருமைகளாக வேங்கடாசலம் கூறுவன யாவை?

(ஆ) ஒழுக்கத்தை ஏன் உயிரினும் மேலாகப் பாதுகாக்க வேண்டும்?

(இ) கல்வி பற்றி நாலடியார் கூறும் கருத்தை விளக்கமாக எழுதுக.

(ஈ) செல்வத்தை உடைக்கும் படைகள் யாவை?

(உ) மெய்ப்பொருள் நாயனாரின் சிவநெறித் தொண்டினை விளக்குக.

(ஊ) மன்னனது கட்டளையாகக் கைகேயி இராமனிடம் தெரிவித்தது என்ன?

(எ) பாலை நிலத்தில் சயங்கொண்டார் கண்ட மரவகைகளைக் கூறுக.

(ஏ) கவிஞர் முடியரசன் உள்ளத்தில் நிலவு தோற்றுவிக்கும் உணர்வுகள் யாவை?

2. பத்துவரிகளில் விடை எழுதுக. (4 × 3 = 12)

(அ) (i) இறைவன் இயல்புகளாக இராமலிங்க அடிகளார் கூறுவன யாவை?

(அல்லது)

(ii) இறைவன் இயல்புகளை நம்மாழ்வார் எவ்வாறு விளக்குகின்றார்?

(ஆ) (i) முத்தநாதன் கொண்ட பொய்த்தவ வேடத்தினைத் தெளிவாக்குக.

(அல்லது)

(ii) இராமன் விடை வேண்டிய காட்சியைத் தெளிவாக வரைக.

(இ) விதுரன் உரைத்த தூதுச் செய்தியைத் தெளிவாக வரைக.

(ஈ) 'உயர்வற உயர்நலம்' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் ஆறு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்துவரிகளில் விடை எழுதுக. (6 × 3 = 18)

(அ) பாண்டித்துரைத் தேவர் பற்றி நீவிர் அறிந்தவை யாவை?

(ஆ) தமிழர் சமுதாயமாக உயர மு.வ. கூறியுள்ள அறிவுரைகளை விளக்குக.

(இ) தமிழில் முதற்காப்பியம் எது? அது யாருடைய கதை?

(ஈ) கலிங்கத்துப் பரணியில் கதவு எவ்வாறு பேசுகிறது?

(உ) ஒழுக்கம் பற்றி வள்ளுவர் உள்ளம் கருதுவது யாது?



(ஊ) பண்டிதமணி அவர்களின் பல்கலைக்கழக ஆசிரியப் பணி பற்றி எழுதுக.

(எ) இசைத் தமிழின் உயர்வை விளக்குக.

(ஏ) மதுரை மாநகர் மதிலும் அகழியும் பற்றி எழுதுக.

4. எவையேனும் ஐந்தனுக்கு இலக்கணக் குறிப்பு வரைக. (5)

(அ) (i) வாழ்கோட்டம்

(ii) கூழைதார்

(iii) முழவுத் தோள்

(iv) கடிமதில்

(v) வெண்மதில்

(vi) போற்றுமின்

(vii) காக்க

(viii) சுட்டபுண்.

(ஆ) சாய்ந்த, உடுத்தான், நின்றான், வீழ்ந்தான் – இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் எழுதுக. $(2 \times 2\frac{1}{2} = 5)$

(இ) வேற்றுப்பொருள் வைப்பணி (அல்லது) சொல்பொருள் பின்வரு நிலையணியினை விளக்குக. (5)

5. ஏதேனும் ஒன்று பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக. (15)

(அ) ஒற்றைப்பனை

(ஆ) கோழியும் சேவலும்

(இ) கற்பனை மனிதர்.